People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

16.4.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 09.4.2011 முதல்15.4.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**09-4-2011 முதல் 15-4-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 11 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 11 |
| 5. | வகுப்பறை வன்முறை | – |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 1 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | – |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 3 |

| | | |
|---|---|---|
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | – |
| 17. | மணல் கொள்ளை | – |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 1 |
| | மொத்தம் | 37 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்



(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு-15
# 09.4.2011 முதல் 15.4.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 992. | 09.4.2011 | **சென்னை வட்டம்:** பரங்கிப்பேட்டை புதுச்சத்திரம் அடுத்த மடவாப்பள்ளம் சுனாமி நகரைச் சேர்ந்த ராமன்(35) மனைவி சோனியா(25) மகன் ஸ்ரீவீத்(2)). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த சோனியா தனது குழந்தையுடன் தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை கூடுதல் & வரதட்சணைக் கொடுமை | தினமலர் |
| 993. | 09.4.2011 | **சென்னை மாவட்டம்:** பெரம்பூரைச் சேர்ந்த கல்லூரி மாணவி நிவேதா. தலைவலி காரணமாக ஸ்கேன் எடுக்கச் சென்றார் நிவேதா. ஸ்கேன் சென்டரில் பணியாற்றிய டாக்டர் கருணாநிதி நிவேதாவிக்கு ஆபாச எஸ்.எம்.எஸ் அனுப்பியதாக நிவேதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 994. | 11.4.20 11 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே சிலைமான் கணேஷ் நகரைச் சேர்ந்த சேவுகராஜா மனைவி பிரவீனா. அதே பகுதியில் சகிதாயவின் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார். வீட்டை காலி செய்ய தாமதம் செய்த பிரவீனாவை சகிதா மிரட்டியதோடு கொலை மிரட்டல் விடுத்ததாக பிரவீனா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 995. | 11.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** சின்னாளப்பட்டியைச் சேர்ந்த வடிவேலு (27) மாற்றுத்திறனாளி. மதுரை அவனியாபுரத்தைச் சேர்ந்த தனலெட்சமி(24). இருவரும் காதலித்து பெற்றோர் எதிர்ப்பை மீறி திருமணம் செய்தனர். தனலெட்சுமியின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததால் காதல் | பெண்கள் மீதான வன்முறை & மாற்றுத்திறனாளிகள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஜோடி திண்டுக்கல் காவல்நிலையத்தில் தஞ்சம். | | |
| 996. | 12.4.2011 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி திமுக ஒன்றி செயலளார் ராஜேந்திரன் வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக பணம் வைத்திருப்பதாகக் காவலர்கள் இரவு ராஜேந்திரன் வீட்டில் இல்லா நேரத்தில் வீட்டை சோதனை செய்ததோடு விசாரணைக்கு எஸ்பி அழைத்ததாக ராஜேந்திரன் மனைவி ரூபாஜெயந்தியை மரியாதைக்குறையாக நடத்தியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 997. | 12.4.2011 | **சென்னை மாவட்டம்:** ஆர்கே.புரம் பாய்டி மகள் மலர்(18). தாய் தந்தை இருவரும் பிரிந்து சென்றதால் பாட்டி பராமரிப்பில் வளர்ந்த மலர் தற்கொலை செய்துக் கொள்வதற்கு முயற்சி. மதுரை ரயில் நிலையத்தில் மயங்கிக் கிடந்த மலரை காவலர்கள் மீட்டு செஞ்சிலுவை சங்கத்தில் ஒப்படைத்தனர். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை முயற்சி | தினகரன் |
| 998. | 13.4.2011 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் ரயில் நிலைய வளாகத்தில் 30 வயது மதிக்கத்தக்க பெண் தன் 2 குழந்தைகளுடன் ரயில் முன் பாய்ந்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 999. | 13.4.2011 | **மதுரை மாவட்டம்:** அண்ணாநகரைச் சேர்ந்த கணேசபாண்டியன் மனைவி செல்வி(41). டூவீலரில் சென்ற செல்வியை எதிரே டூவீலரில் வந்த இரண்டு வாலிபர்கள் தாக்கி அவரது 9 பவுன் நகையை பறித்துச் சென்றதாக செல்வி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1000. | 13.4.2011 | **மதுரை மாவட்டம்:** அண்ணாநகர் பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த சங்கரன் மனைவி ஜானகி(60) வாக்கிங் சென்ற போது டூவீலரில் வந்த வாலிபர்கள் நகையை பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1001. | 13.4.2011 | **கன்னியாகுமரி** | பெண்கள் மீதான | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **மாவட்டம்:** விழுந்தயம்பலம் அடுத்துள்ள அறுத்தகுட்டிவிளை பகுதியைச் சேர்ந்த ஸ்டீபன்சன்(36) மனைவி சுமிதா(32), ஹரீஷ்(4), அனைனா(9). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த சுமிதா குழந்தைகளை எரித்துக் கொலை செய்துவிட்டு தானும் தூக்கிட்டுத் தற்கொலை. | வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | |
| 1002. | 13.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஒட்டன்சத்திரம் டிஎஸ்பி குணசேகரன், செம்பட்டி இன்ஸ்பெக்டர் பொன்ரகு, தேர்தலில் கட்சியினர் பணப்பட்டுவாடா செய்ததை தடுக்க தவறியதாக இருவரும் பணி ––––––––––– | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1003. | 14.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மண்மலைமேடு பகுதியைச் சேர்ந்த டி. பாலமுருகன், இவர் ஒரு வார இதழில் செய்தியாளராகப் பணிபுரிந்த வருகிறார். ஓட்டுப்போடச் சென்ற பாலமுருகனுக்கும், தேர்தல் அதிகாரி சுப்ரமணியனுக்கு ஏற்பட்ட வாக்குவாதத்தில் காவல் பணியில் ஈடுபட்ட காவல் ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் லத்தியால் செய்தியாளர் பாலமுருகனைத் தாக்கியதாக புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 1004. | 14.4.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் சிருஷ்ணமாச்சாரி சாலையில் உள்ள ஹாஜி. பி.செய்யதுமுகமது பள்ளியில் வாக்குப் பதிவு நடைபெற்றபோது வாக்குச் சாவடியில் நின்ற பொதுமக்களையும், பெண்களையும் ரோந்து வந்த காவல் ஆய்வாளர் ராஜா, தாக்கியதாக புகார். தாக்குதலில் செய்யது அபுதாகீர் என்பவர் காயம். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 1005. | 14.4.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி ஸ்ரீரங்கம் தொகுதிகுட்பட்ட தாயனூர் வாக்குச் சாவடியில் நின்ற பொதுமக்கள் மீது உதவி | காவல் நிலையச் சித்திரவதை & தடியடி | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆய்வாளர் அருண் தடியடி நடத்தியதில் 10 பேர் காயம். | | |
| 1006. | 14.4.2011 | **சேலம் மாவட்டம்:** சிவதாபுரத்தில் வாக்குச்சாவடி அருகே இருந்த கூட்டத்தைக் கலைப்பதற்காக காவலர் இன்ஸ்பெக்டர் சுரேஷ்குமார் நடத்திய தடியடியில் விவதாபுரம் குடுமியான் தெருவைச் சேர்ந்த சின்னத்தம்பி(52). மரணம். காவல் துறையை கண்டித்து பொதுமக்கள் சாலை மறியல். | காவல் நிலையச் சித்திரவதை | தினமணி |
| 1007. | 14.4.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பாப்பிரெட்டிப்பட்டி தொகுதிக்கு உட்பட்ட ஏ. பள்ளிப்பட்டி கிராமம் அருகேயுள்ள ஊராட்சி துவக்கப் பள்ளியில் வாக்குச்சாவடியில் வாக்காளர்களுக்கு பூத் சிலிப்களை வழங்கினார். கூட்டமாக நின்ற பொதுமக்கள் மீது காவலர்கள் தடியடி. 3 மணி நேரம் வாக்குப் பதிவு தடை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1008. | 14.4.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே எட்டியமங்கலம் கிராமத்தில் வாக்குப்பதிவு தொடங்கியது. வாக்குப்பதிவில் திமுகவினருக்கும், அதிமுகவினருக்கும் ஏற்பட்ட மோதலில் திமுக பிரமுகர் நாச்சிமுத்து (39). விடுதலை சிறுத்தைகள் கட்சி உறுப்பினர் மலைச்சாமி மீது அரிவாள் வெட்டு. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1009. | 15.4.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் வெம்பக்கோட்டை அருகே உள்ள சூரார்பட்டியில் வெம்பக்கோட்டையைச் சேர்ந்த பாஸ்கர சேதுபதி என்பவரது பட்டாசு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 2 பெண்கள் உயிரிழப்பு. | பட்டாசு ஆலை தீ விபத்து | தினமணி |
| 1010. | 15.4.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.பாலசுப்பிரமணியன் மார்க்சிஸ்ட் கட்சி அறிக்கையில் ஓட்டுக்கு லஞ்சம் கொடுத்தவரை பிடித்துக் கொடுத்தவர் மீதே வழக்கு பதிவு செய்ய காவல்துறை | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முயற்சி செய்வதாக புகார். | | |
| 1011. | 15.4.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூரில் பணியாற்றும் தென் மாவட்ட பணியாளர்கள் ஊருக்குச் செல்ல பேருந்து கிடைக்காமல் சாலை மறியல். மறியலில் ஈடுபட்டவர்கள் மீது காவல்துறை தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 1012. | 15.4.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே பண்ணைப்பட்டியைச் சேர்ந்த ராம்குமார்(27) தனது உறவுக்காரப் பெண்ணுடன் வாக்குச் சாவடியில் வாக்களிக்கச் சென்றபோது அதே பகுதியைச் சேர்ந்த அய்யர்(30) ராம்குமாரின் உறவுக்காரப் பெண்ணை இடித்து கீழே தள்ளியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1013. | 15.4.2011 | **கரூர் மாவட்டம்:** கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த உமா 7–ம் வகுப்பு மாணவி. பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்த உமாவை இஸ்மாயில் என்பவர் கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்ததோடு விபசாரத்தில் ஈடுபடுத்த முயன்றதாக புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1014. | 15.4.2011 | **நாமக்கல் மாவட்டம்:** பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. கூட்டணி சார்பில் பா.ம.க.வும், அ.தி.மு.க கூட்டணி சார்பில் கொங்கு இளைஞர் பேரவையும் போட்டியிட்டது. பா.ம.க மற்றும் தமிழ் நாடு கொங்கு இளைஞர் பேரவை நிர்வாகிகள் இடையே மோதல். காவல்துறை தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 1015. | 15.4.2011 | **கோவை மாவட்டம்:** கவுண்டாம்பாளையம் ஹவுசிங் யூனிட் அருகில் உள்ள அம்பேத்கார் நகரைச் சேர்ந்த சித்ரா(32). குழந்தைகள் ஹரிபிரியா(21/2), வர்ஷா(5) இரண்டு பெண் குழந்தைகள். குழந்தைகளின் பிறந்த நேரம் சரியில்லை எனக் கூறி பாட்டியும் தாய் சித்ராவும் குழந்தைகளை அடித்து துன்புறுத்தியதோடு, | குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **சூடுபோட்டதாக புகார்.** | | |